366

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

நவம்பர் 17, 1999 தொகுதி 84
எண் 1

D
V211;31'N99.
N99'84.1
221076

டு 09-02-2000 Issued 09-02-2000

# தமிழ்நாடு
# ட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**புதன்கிழமை, நவம்பர் 17, 1999 - தொகுதி 84 - எண் 1**

**Wednesday, 17th November, 1999—Volume 84 - No. 1**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

லை ரூ. *3.00*] [Price Rs. 3.00

17-11-1999

3b2 / 2000

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Personnel of the Government of Tamil Nadu | ix- xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv - xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் 18 பேர் மறைவு | 1 - 4 |
| **2. இரங்கல் தீர்மானங்கள்—** | |
| முதல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் தியாகி திரு. டி. செங்கல்வராயன், மாநில, மத்திய முன்னாள் அமைச்சர் டாக்டர் சத்தியவாணி முத்து, முன்னாள் அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் மற்றும் உறுப்பினர்கள் திரு. அன்பில் பொய்யாமொழி, திரு. நெல்லிக்குப்பம் அ. மணி ஆகியோர் மறைவு | 4 - 32 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 5 - 8 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 8 - 10 |
| திரு. ஜி. பழனிசாமி | 11 - 12 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 12 - 14 |
| திரு. ஜ. கணேசன் | 14 - 16 |

V211,31 N97
N79·84.1

பக்கங்கள்

2. **இரங்கல் தீர்மானங்கள்—** தொடர்ச்சி

| | |
|---|---|
| * திரு. முகம்மது கோதர் மைதீன் | 16 - 17 |
| * திரு. லா. சந்தானம் | 18 - 19 |
| திரு. டி. மணி | 19 - 21 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 21 - 23 |
| திரு. சி. வேலாயுதன் | 23 - 24 |
| திரு. பி. வெங்கடசாமி | 25 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 25 - 26 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 26 - 28 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 28 - 32 |

3. **அறிவிப்பு—**

| | |
|---|---|
| அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் | 33 |

4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 33 - 48

221076

**தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்**

***ஆளுநர் — நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி***

***அமைச்சரவையின் உறுப்பினர்கள்***

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை,வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
உணவு, விலைக்கட்டுப்பாடு மற்றும் குடிமைப்பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.



12. பால்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளை (வஃப்)

14. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில்

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
*வனம், சின்கோனா மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.*

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.*

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
*கால்நடைப் பராமரிப்பு.*

22. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*



23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*

---

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M.Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | | |
|---|---|---|
| **21. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rasan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

## *மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி.டி. தண்டபாணி
2. டாக்டர் காஞ்சனா கமலநாதன்
3. திரு. பெ. ஆசையன்
4. டாக்டர் ஆ. ஞானசேகரன்
5. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
6. திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

*18-11-1999 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |

13. திரு. க. சம்பத்ராஜன், .. துணைச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.

14. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

15. திரு. எம். ஜோபாய், .. துணைச் செயலாளர்
பி.காம்., பி.ஜி.எல்.

16. திரு. இரா. முருகானந்தம், .. துணைச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்.

17. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

18. திரு. கோ. ஞானப்பிரகாசம், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

19. திரு. ஜி. அனீஸ் அகமத், .. துணைச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

20. திரு. மா. செல்வராஜ், .. துணைச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்.

21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

22. திரு. சு. பாலச்சந்தர், .. சார்புச் செயலாளர்
பி.ஏ., பி.எல்.

23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

24. திரு. கோ. ரவீந்திரன், .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், .. சார்புச் செயலாளர்
எம்.ஏ



26. திரு. டி. கோவிந்தராஜு, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், .. சார்புச் செயலாளர்
எம்.எஸ்சி., பி.எல்.

28. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல் .. தலைமை நிருபர்

29. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்

30. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

31. திரு. ச. பாலகிருஷ்ணன், .. சார்புச் செயலாளர்
பி.எஸ்சி., பி.எல்.

32. திருமதி இரா. அமிர்தவல்லி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.எல்.

33. திருமதி கி. இந்திரா, .. சார்புச் செயலாளர்
பி.ஏ., பி.ஜி.எல்.

34. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்

35. திருமதி என். மீனாட்சி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

36. திரு. மு. பொன்னுரங்கம், .. தலைமை நிருபர்
எம்.ஏ., பி.எல்.

37. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்

38. திருமதி ப. சரஸ்வதி, .. சார்புச் செயலாளர்
எம்.ஏ., பி.ஜி.எல்.

39. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு.ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 15. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 16. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 17. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 18. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 19. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 20 | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |

21. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

22. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

23. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

24. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

25. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)

26. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

27. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

28. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

30. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

31. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

32. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

33. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

34. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

35. இராமஜெயம், திரு. ந.பூ .. மயிலாப்பூர்

36. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

37. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

38. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

39. ஈஸ்வரன். திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

40. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

41. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

42. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி



43. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்

44. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

45. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

46. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

47. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

48. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

49. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

50. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

51. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

52. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி

53. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்

54. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

55. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

56. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

57. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

58. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

59. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

60. கோபால், திரு. பா. .. மேட்டூர்

61. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

62. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

63. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

64. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

65. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

66. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
67. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
68. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
69. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
70. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
71. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
72. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
73. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
74. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
75. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
76. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
77. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
78. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
79. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
80. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
81. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
84. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
85. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
86. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
87. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்



88. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
89. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
90. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
91. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
92. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
93. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
94. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
95. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
96. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
97. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
98. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
99. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
100. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
101. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
102. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
103. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
104. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
105. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
106. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
107. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
108. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
109. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

110. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
116. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு... இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
123. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு.எஸ்.வி.. பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)



133. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
134. நடராஜன், திரு. த. .. செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
139. நாஞ்சில் கி. மனோகரன், திரு... திருவல்லிக்கேணி
140. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
141. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
142. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
143. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
147. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
148. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
149. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
150. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
151. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
152. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

153. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
154. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
155. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
156. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
157. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
158. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
159. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
160. பெரியசாமி, திரு. என்.கே.கே... ஈரோடு
161. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
162. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
163. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
164. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
167. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்.. நிலக்கோட்டை (செ.வ.)
168. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
169. மணிக்கண்ணன், திரு. ஆ.செ... திருநாவலூர்
170. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
171. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
172. மணி, திரு. டி. .. விளவங்கோடு
173. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
174. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



175. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
176. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
177. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
178. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
179. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
180. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
181. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
182. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
183. முகம்மது இஸ்மாயில் திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
184. முகம்மது கோதர் மைதீன், திரு... பாளையங்கோட்டை
185 முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
186. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
187. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
188. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
189. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. மூக்கப்பன், திரு. இரா .. சின்னசேலம்
192. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
193. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
194. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
195. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
196. ரங்கநாதன், திரு. எம். .. அன்னூர் (செ.வ.)
197. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

| | | |
|---|---|---|
| 198. | ரவி அருணன், திரு. கே. | .. தென்காசி |
| 199. | ரவிசங்கர், திரு. கு. | .. விளாத்திகுளம் |
| 200. | ராசேந்திரன், திரு. ஏ. | .. போளூர் |
| 201. | ராணி, செல்வி க. | .. தலைவாசல் (செ.வ.) |
| 202. | ராமசாமி, திரு. ஏ.எம். | .. ஆத்தூர் |
| 203. | ராமச்சந்திரன், திரு. செ. | .. திருப்பரங்குன்றம் |
| 204. | ராஜு, திரு. எஸ். | .. பொள்ளாச்சி |
| 205. | ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. சத்தியமங்கலம் |
| 206. | ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. காங்கேயம் |
| 207. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 208. | வல்லரசு, திரு. பி.என். | .. உசிலம்பட்டி |
| 209. | வாசுகி முருகேசன், திருமதி | .. கரூர் |
| 210. | விஜயகுமார், திரு. கே.எம். | .. சாத்தூர் |
| 211. | விஜயன், திரு. டி.சி. | .. திருவொற்றியூர் |
| 212. | விசுவநாதன் திரு. இரா. | .. நத்தம் |
| 213. | வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு. | .. வீரபாண்டி |
| 214. | வீரப்பன், திரு. கே.கே. | .. கபிலர்மலை |
| 215. | வெங்கடசாமி, திரு. பி. | .. ஓசூர் |
| 216. | வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 217. | வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. பாலக்கோடு |
| 218. | வெங்கடேசன், திரு. ச.க. | .. மதுராந்தகம் |
| 219. | வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. காவேரிப்பட்டினம் |



| | | |
|---|---|---|
| 220. | வெங்கிடு, திரு. ஜி.பி. | .. கோபிச்செட்டிப்பாளையம் |
| 221. | வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. அரூர் (செ.வ.) |
| 222. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 223. | வேலாயுதன், திரு. சி. | .. பத்மநாபபுரம் |
| 224. | வேலுசாமி, திரு. வ. | .. மதுரை கிழக்கு |
| 225. | வேல்சாமி, திரு. க. | .. நாமக்கல் (செ.வ.) |
| 226. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |
| 227. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 228. | ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. திருச்செந்தூர் |
| 229. | ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. முசிறி |
| 230. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 231. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 232. | ஆன் டி' மான்டி, திருமதி | .. நியமனம் |
| 233. | (வெற்றிடம்) | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 234. | (வெற்றிடம்) | .. அறந்தாங்கி |
| 235. | (வெற்றிடம்) | .. நெல்லிக்குப்பம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 1, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 நவம்பர் 17, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:***

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்திவ் வுலகு"

இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்துவிட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

## 1. இரங்கற் குறிப்புகள்

### *முன்னாள் உறுப்பினர்கள் 18 பேர் மறைவு*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** இரங்கற் குறிப்புகள். கடந்த கூட்டத் தொடர் முடிவுற்றதற்கும், இன்றைய கூட்டத்திற்கும் இடைவெளியில் முன்னாள் உறுப்பினர் பெருமக்கள் 18 பேர் இறந்திருக்கின்றார்கள். அவர்கள் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ஆறுமுகம் அவர்கள் 23-12-1998 அன்றும், திரு. எம்.பி. வடிவேலு அவர்கள் 19-05-1999 அன்றும், திரு. ஆர். கோவிந்தசாமி அவர்கள் 21-05-1999 அன்றும், திரு. க. நாச்சிமுத்து அவர்கள் 31-05-1999 அன்றும், திரு. என். சௌந்திர பாண்டியன் அவர்கள் 30-06-1999 அன்றும், திரு. இ.எஸ். தியாகராஜன் அவர்கள் 02-07-1999 அன்றும், திரு. க. சோலைராசு அவர்கள் 02-07-1999 அன்றும், திரு. கி. அப்துல் லத்தீப் அவர்கள் 07-07-1999 அன்றும், திரு. ந. முத்துவேல் அவர்கள் 07-07-1999 அன்றும், திரு. எம். சுந்தரசாமி அவர்கள் 18-07-1999 அன்றும், திரு. வி. ராமசாமி அவர்கள் 23-07-1999 அன்றும், திரு. என். கிருஷ்ணன் அவர்கள் 10-08-1999

அன்றும், திரு. ஏ.ஏ. ரஷீத் அவர்கள் 15-08-1999 அன்றும், திரு. கி.பொ. கோபால் அவர்கள் 02-09-1999 அன்றும், திரு. எம்.எஸ். செல்வராஜன் அவர்கள் 13-10-1999 அன்றும், திரு. ப. பெரியசாமி அவர்கள் 17-10-1999 அன்றும், திரு. டி. மார்டின் அவர்கள் 24-10-1999 அன்றும், டாக்டர் துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 16-11-1999 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ஆறுமுகம் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை தானிப்பாடி தனித் தொகுதியிலிருந்தும், 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை வந்தவாசி தனித் தொகுதியிலிருந்தும் இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. எம்.பி. வடிவேலு அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. ஆர். கோவிந்தசாமி அவர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. க. நாச்சிமுத்து அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை பொங்கலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. என். சௌந்திர பாண்டியன் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும், 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையிலும் ராதாபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. இ.எஸ். தியாகராஜன் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை திருத்தணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. க. சோலைராசு அவர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை மருங்காபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. கி. அப்துல் லத்தீப் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை கடலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.





திரு. ந. முத்துவேல் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும், 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் வானூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. எம். சுந்தரசாமி அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முற்பகல் 9-35

திரு. வி. ராமசாமி அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. என். கிருஷ்ணன் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. ஏ.ஏ. ரஷீத் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. கி.பொ. கோபால் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கம்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. எம்.எஸ். செல்வராஜன் அவர்கள் சாத்தான்குளம் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1955 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்றி, மீண்டும் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு மற்றும் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு என இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆக மொத்தம் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. ப. பெரியசாமி அவர்கள் பெருந்துறை தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1994 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை பணியாற்றியுள்ளார்.

திரு. டி. மார்டின் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சாத்தான்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேற்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் எல்லோருமே சிறப்பாக சட்டமன்றத்திலே பணியாற்றியுள்ளார்கள். மேற்காணும் முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால், அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. இரங்கல் தீர்மானங்கள்

**முதல் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் தியாகி திரு. டி. செங்கல்வராயன், மாநில, மத்திய முன்னாள் அமைச்சர் டாக்டர் சத்தியவாணி முத்து, முன்னாள் அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் மற்றும் உறுப்பினர்கள் திரு. அன்பில் பொய்யாமொழி, திரு. நெல்லிக்குப்பம் அ. மணி ஆகியோர் மறைவு**

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** முதல் சட்டமன்ற பேரவை உறுப்பினரும், முன்னாள் அரசமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினரும், விடுதலைப் போராட்ட வீரருமான திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்கள், முன்னாள்



அமைச்சர் டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள், இந்த மன்றத்திலே இப்போது இந்த முறை உறுப்பினர்களாக இருந்து மறைந்த தம்பி, திருச்சிராப்பள்ளி தொகுதி-2 உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்கள், நெல்லிக்குப்பம் தொகுதி உறுப்பினர் நண்பர், திரு. அ. மணி அவர்கள் ஆகியோர் மறைவு குறித்து இரங்கல் தீர்மானங்களைப் பேரவை முன்னவர் முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதல் சட்டமன்ற பேரவை உறுப்பினரும், முன்னாள் அரசமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினரும், விடுதலைப் போராட்ட வீரருமான திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் மறைவு குறித்து இந்த இரங்கல் தீர்மானம்.

"விடுதலைப் போராட்ட வீரரும், சமுதாயப் பணிகளில் ஈடு இணையற்ற தொண்டு புரிந்தவரும், தமிழ்ப் பற்று மிக்கவரும் தியாக சீலரும், ஒழுக்கம், நேர்மை ஆகிய நற்பண்புகளைக் கொண்டவருமான வழக்கறிஞர் திரு.எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் 31-10-1999 அன்று, தமது 97 ஆவது வயதில் மறைவுற்ற செய்தி அறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் அடைகின்றது.

*முற்பகல் 9-40*

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் 1937-39 ஆம் ஆண்டுகளில் மேலூர் பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை மாகாண முதல் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1946-50 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசியல் நிர்ணய சபையிலும், 1950-52 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்திலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்கள். சுதந்திரப் போராட்டத்தில் அவரும், அவரது துணைவியாரும் சிறைப்பட்டனர். அவருடைய மகளும், பேரனும்கூட அப்படிப்பட்ட போராட்டத்தில் சிறை சென்றனர்.

அன்னாரின் மறைவினால், அவரை இழந்து வருந்தும் அவரின் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றது."

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 நவம்பர் 17

தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்களுடைய மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்:

"விடுதலைப் போராட்டத் தளநாயகர்களில் தலைசிறந்தவரும், பண்பின் பெட்டகமாகவும், அன்பை அடிப்படையாகக் கொண்டு மனித நேயத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவருமாகிய உத்தமத் தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் 8-11-1999 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கின்றது.

சிறந்த வழக்கறிஞராகவும், கேட்டார் பிணிக்கும் சொற்பொழிவாளராகவும் விளங்கிய அவர் 1952-53 ஆம் ஆண்டுகளில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயராகவும், 1963-72 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் விளங்கி திறம்படச் செயலாற்றியுள்ளார். அவர் தனி நபர் சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைப்பட்ட தியாகச் செம்மல். அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கின்றது."

டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையின் முன்னாள் உறுப்பினரும், மாநிலங்களவையின் முன்னாள் உறுப்பினரும், மாநில மற்றும் மத்திய முன்னாள் அமைச்சருமான டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் 11-11-1999 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து, இப்பேரவை ஆழ்ந்த வருத்தம் கொள்கின்றது.

டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் 1957 முதல் 1962, 1967 முதல் 1971 மற்றும் 1971 முதல் 1976 ஆகிய ஆண்டுகளில் சென்னை, பெரம்பூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1977-78 ஆம் ஆண்டுகளில் மேலவை உறுப்பினராகவும், 1978-84 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் மற்றும் 1967-74 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அமைச்சராகவும், 1980 ஆம் ஆண்டில் மத்திய அமைச்சராகவும் செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.



1999 நவம்பர் 17] [பேராசிரியர் க. அன்பழகன்]

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாள் உறுப்பினராக இருந்து, சமுதாய சீர்திருத்தப் பணியிலும், தாழ்த்தப்பட்டோர் நலம் காக்கும் தொண்டிலும், மகளிர் முன்னேற்றத்திற்கான முயற்சிகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டுச் செயலாற்றியவர்.

அன்னாரின் மறைவினால், அவரை இழந்து வருந்தும் அவரின் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது."

திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்:

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1968-71, 1977-83, 1983-86 ஆகிய ஆண்டுகளில் உறுப்பினராகவும், 1977-85 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகவும், தொழிற்சங்கவாதியாகவும் விளங்கிய, இனிய பண்பும், நேசமும் கொண்ட திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் 17-10-1999 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை ஆற்றொணாத் துயரமும், வருத்தமும் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்துள்ள இயக்கத்தினருக்கும் இப்பேரவை ஆழ்ந்த அனுதாபத்தினையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றது."

திரு. அன்பில் பொய்யாமொழி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்:

"1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையிலும், பின்னர் இரண்டாவது முறையாக 1996 ஆம் ஆண்டிலிருந்தும் திருச்சிராப்பள்ளி-2 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தான் சார்ந்துள்ள இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுறுதி கொண்டவராகவும், மக்கள் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுபவராகவும், அனைத்துக் கட்சியினரிடமும் நட்போடு பழகும் இனிய பண்பு வாய்ந்தவராகவும் விளங்கிய திரு. அன்பில் பொய்யாமொழி அவர்கள் 28-8-1999 அன்று திடீரென்று மறைவுற்ற செய்தி அறிந்து, இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவால், அவரை இழந்து துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கின்றது."

*முற்பகல் 9-45*

திரு. நெல்லிக்குப்பம் அ. மணி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நெல்லிக்குப்பம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, இப்பேரவையில் உறுப்பினராக இருந்தவரும், எளிமையும், அடக்கமும், இனிய பண்பும், செயல்திறனும் கொண்டவராகத் திகழ்ந்தவருமான பண்ணுருட்டி திரு. அ. மணி அவர்கள், 11-11-1999 ஆம் நாளன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவினால், அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றது."

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. சோ. பாலகிருஷ்ணன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்றாண்டில் இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தன்னையும், தன்னுடைய குடும்பம் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் மறைவு குறித்து நம்முடைய பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிந்து பேசுகிறேன். திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும்கூட, இறுதியாக 50-வது விடுதலை நாள் விழா அன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடந்த விழாவில், அந்த முதுபெரும் பெரியவர் பேசியதை நான் கேட்டேன். 94, 95 வயதிலேகூட, மிக வேகமாகவும், விறுவிறுப்பாகவும், நல்ல தமிழிலும் அவர்கள் பேசியதை நான் கேட்டு, ஆச்சரியப்படுகின்ற அளவிற்கு அவர் விளங்கினார் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நல்ல மனிதர் சுதந்திரத்திற்காகப் போராடிய பெரியவர், இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காக, குடும்பத்தோடு தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட அந்தப் பெரியவருடைய ஆத்மா சாந்தியடைய இந்த அவையில் முழு மனதோடு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.





அதேபோல, செங்கல்வராயன் அவர்கள். நம்முடைய ஜவஹர்லால் நேரு அவர்கள் இங்கே எப்பொழுது வந்தாலும், அவருடைய ஆங்கில உரையை மொழிபெயர்த்துச் சொல்கின்ற வல்லமை பெற்றவர் என்று அனைவராலும் அறியக்கூடிய ஒரு பெரிய மனிதர் செங்கல்வராயன். நல்ல பண்பாடு மிக்கவர். அவரைப் பற்றி 'தினமணி' பத்திரிகையிலே அருமையான, அனுதாபம் எற்படக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல கட்டுரையை எழுதியிருந்தார்கள். அதிலே அவரிடம், "உங்களுடைய திறமைக்கும், தகுதிக்கும் நீங்கள் மத்தியில் அமைச்சராக இருக்க வேண்டுமே, ஏன் இருக்கவில்லை" என்று கேட்டதற்கு "இறைவன் எனக்குக் கொடுத்த இதுவே போதும் என்ற மன நிறைவோடு நான் இருக்கிறேன்." என்று சொன்னதை, மிகக் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த அளவிற்குப் பதவி ஆசை இல்லாமல், அதேநேரத்தில், அகில இந்திய அளவிலேயும் சிறந்த தலைவராக விளங்கிய செங்கல்வராயன் அவர்கள், சென்னை மேயராக இருந்த காலத்திலும் சரி, அதன்பிறகு Alderman என்று சொல்லக்கூடிய உயர் பதவியில் இருந்த காலத்திலும் சரி, சென்னை மாநகராட்சியில் அவருடைய முத்திரையைப் பதிக்கின்ற அளவிற்கு சிறப்பான முறையில் பணியாற்றி இருக்கிறார்கள். கடைசி நாள்வரை இந்த தேசத்தைப் பற்றிய, தமிழ்நாட்டு மக்களைப் பற்றிய சிந்தனையோடு இருந்த மிகப் பெரியவர் செங்கல்வராயன் அவர்கள். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை நான் வேண்டுகிறேன்.

அதேபோல, நம்முடைய டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள். நாங்களெல்லாம் இளைஞர்களாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி நினைக்கின்றபோது, ஐந்து பேரைப் பற்றித்தான் பத்திரிகைகளிலே நாம் பார்த்திருக்கிறோம். அண்ணா அவர்கள், கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், நாவலர், அதோடு சத்தியவாணி முத்து என்ற இந்த ஐந்து பேரைப் பற்றித்தான் அந்தக் காலங்களிலே பத்திரிகைகளிலே வரும். அப்படி, திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாளிலிருந்து, அந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டு இந்தச் சட்டமன்றம், மேலவை, நாடாளுமன்றம் ஆகியவற்றிலேயெல்லாம் பதவி வகித்து, அமைச்சராக இருந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த ஒருவர், தமிழகம் தழுவிய மிகப் பெரிய தலைவராக விளங்கி, சமுதாயத்திற்குப் பணியாற்றிய சத்தியவாணி முத்து அவர்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை நான் வேண்டுகிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1999 நவம்பர் 17

*முற்பகல் 9-50*

திரு. இராகவானந்தம் அவர்கள் இந்த அவையில் அமைச்சராக இருந்தார். அவர் ஒரு நல்ல தொழிற்சங்கத் தலைவராக இருந்து சிறந்த பணியாற்றினார். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை நான் வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, அன்பில் பொய்யாமொழி அவர்கள் இந்த அவையிலே மிக அன்பான முகத்தோடு, இனிய சுபாவத்தோடு என் முன்னால் அமர்ந்திருந்த ஒரு நல்ல நண்பர். அவர் இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தற்செயலாக நான் திருச்சிக்குச் சென்றிருந்த நேரத்தில் அங்கே அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்து என்று ஒரு பத்திரிகையில் ஒரு விளம்பரம் அடித்திருந்தார்கள். அதைப் பார்த்து, உடனடியாக அவரோடு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு நான் அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்தைச் சொன்னேன். மிக அன்போடு, பாசத்தோடு பேசினார். நீங்கள் வருங்காலத்தில் ஒரு நல்ல அமைச்சராக வரவேண்டும் என்று அந்த நேரத்தில் நான் வாழ்த்தினேன். அவர் இன்றிருந்தால் ஓர் அமைச்சராகக்கூட வந்திருப்பார். அந்த நல்ல நண்பர், அருமையாகப் பழகக்கூடிய, என்றும் இனிய முகத்தையுடைய அன்பில் பொய்யாமொழி அவர்கள் இறந்தது, நம்மைவிட்டு மறைந்தது, இந்த அவைக்கே ஒரு பெரிய நஷ்டம் என்பதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பெரிய ஒரு பேரிழப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை நான் வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக நண்பர் மணி அவர்கள், மிக ஏழையெளிய குடும்பத்திலே பிறந்து இங்கு சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறார் என்று அவர் இறந்த அன்று நான் பத்திரிகையிலே பார்த்தேன். இந்த நாட்டில் ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்தவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அந்தப் பகுதி மக்களுக்கும், அவர் சார்ந்த இயக்கத்திற்கும் பணியாற்றிய அந்த நல்ல மனிதர் மறைந்ததை எண்ணி வருந்தி, அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று கேட்டு, இந்த 6 பேர்களுடைய மறைவிற்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** [illegible]



1999 நவம்பர் 17]

***திரு. ஜி. பழனிசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசம் விடுதலை பெற வேண்டும் என்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களுக்கும், அதேபோன்று சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர் டி. செங்கல்வராயன் அவர்களுக்கும், நம் நாடு விடுதலை பெற வேண்டும், அன்னியரை வெளியேற்றவேண்டும் என்பதற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட அந்த உத்தமத் தலைவர்களின் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களும் சுதந்திரப் போராட்டத்திலே தங்களை இணைத்துக் கொண்டிருக்கிற ஒரு வரலாற்றுச் சிறப்பைத் தமிழகம் பெற்றிருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுடைய தியாக உணர்வு இந்த நாட்டிலே நிலைத்து நிற்கும். அவர்கள் ஆற்றிய பணிகளை நம்மைப் போன்று பொது வாழ்க்கையில் இருக்கக்கூடியவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு சபதம் எடுத்துக்கொள்ளும் நல்ல வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தவகையில், அந்த சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு நாங்கள் தலைவணங்கி அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு சத்தியவாணி முத்து அவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பிலே பிறந்திருந்தாலும்கூட, அந்த நேரத்தில் ஏழையெளிய தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் இருந்து ஒரு பெண் அமைச்சராக இருந்து, இன்னும் சுய மரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டு பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் போன்ற தலைவர்களோடு இருந்து திறம்பட சமூகப் பணியாற்றி — கிராமத்தில் இருந்து வந்த பெண் பணியாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் — அரசியலிலே எந்த அளவிற்கு விழிப்புணர்வு பெற்றிருந்தார் என்று எண்ணிப் பார்க்க முடியும். அந்த அளவிற்கு அவருடைய பணி நம்முடைய தேசத்திற்கும், மாநிலத்திற்கும் அமைந்தது.

அதேபோன்று, முன்னாள் அமைச்சர் இராகவானந்தம் அமைச்சராக இருந்து பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை இயற்றி, நாட்டிலேயுள்ள தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பணியாற்றி மறைந்திருக்கிற அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை நாங்கள் தெரிவித்துக்கொள்ளக்

அதேபோன்று, நம்மோடு சக உறுப்பினராக இருந்த அன்பில் பொய்யாமொழி அவர்கள் இனிய முகத்தோடு, நல்ல பண்பாட்டோடு பழகக் கூடியவர். அவரோடு நான் தொடர்ந்து 2 முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் நல்ல வாய்ப்பு பெற்றிருக்கிறேன். நம்முடைய மேயரோடு உறுதுணையாக அவரும் சேர்ந்து ஒன்றாக அமர்ந்திருப்பார்கள். எந்த நேரத்திலும் சிரித்த முகத்தோடு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கண்டு அவர் வணக்கம் செலுத்தும் பாங்கு, பொதுவாக எல்லாத் தரப்பு மக்களிடத்திலேயும் இனிய முறையிலே பழகுகிற பாங்கு, அதோடுமட்டுமல்லாமல், தான் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைகளை, தன்னுடைய தந்தை வழியிலே பின்பற்றி அவர் பணியாற்றியது பாராட்டத்தக்கது. இத்தகைய சிறப்புடைய சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர் இந்த நேரத்தில் இல்லாமல் இருப்பதென்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

*முற்பகல் 9-55*

அதேபோன்று, திரு. அ. மணி அவர்கள் என்னுடைய அறைக்கு அருகில் இருக்கக்கூடியவர். எந்த நேரத்திலும் படாடோபமில்லாத தன்னடக்கத்தோடு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னால் அது மிகையாகாது. 10 பேர், 20 பேர்களுடன் அவர் போகமாட்டார். அப்படி ஒரு தன்னடக்கத்தோடு இருக்கக்கூடியவர். சில சந்தர்ப்பங்களிலே செய்திகளைப் பார்த்துவிட்டு உடனடியாக என்னை அவருடைய அறைக்குக் கூப்பிட்டுச் சொல்வார்கள். அந்த அளவுக்கு மிக நெருக்கமாகப் பழகக்கூடியவர். அவருடைய இழப்பு என்பது எதிர்பார்க்கமுடியாத அளவுக்கு ஒரு அதிர்ச்சியைத் தரக்கூடிய விதத்திலே ஏற்பட்டிருக்கிறது. அவருடைய மறைவிற்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதற்கு முன்னதாக, இந்த மாமன்றத்திலே பணியாற்றி மறைந்த 18 சட்டப்பேரவை உறுப்பினர்களின் மறைவிற்கும் இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர் திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் சென்னை மாகாணத்தில் முதல் சட்டப் பேரவையினுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இந்திய அரசியல் நிர்ணய சபை மற்றும் நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்.



97 வயது நிரம்பிய அவர்கள் இயற்கை எய்தியதற்கு என்னுடைய சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலும் அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் போராட்ட வீரர். சென்னை மாநகராட்சியினுடைய மேயராக இருந்திருக்கிறார்கள். மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்கள். அவருடைய மறைவிற்கும் என்னுடைய சார்பிலும், எங்கள் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டாக்டர் சத்தியவாணி முத்து அவர்களைப் பொறுத்தவரையில் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். அவர் மேலவையினுடைய உறுப்பினராக இருந்திருக்கிறார். இந்த மன்றத்திலேயும் உறுப்பினராக இருந்திருக்கிறார். புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அமைச்சரவையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அவரை அமைச்சராக ஆக்கியதை இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கிறோம். அவருடைய பேரிழப்பிற்காக என்னுடைய சார்பிலும், எங்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, திரு. எஸ். இராகவானந்தம் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தொழிற்சங்கவாதியாக இருந்தவர். இந்த மாமன்றத்திலே அமைச்சராகக்கூட இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளராகவும்கூட ஒரு சமயத்திலே இருந்திருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய சார்பிலும், எங்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாமன்றத்திலே சக உறுப்பினராக இருந்த திரு. அன்பில் பொய்யாமொழி அவர்களைப் பொறுத்தவரையில், அவர் அனைவரும் கூறியதைப் போல பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். என்னோடு இரண்டு முறை ஒரு குழுவில் உறுப்பினராகக்கூட

இருந்திருக்கிறார். அந்த சமயத்தில் எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்புகூட உண்டு. அப்போதெல்லாம் அவர் கட்சிப் பாகுபாடு இல்லாமல் நல்ல முறையில் பழகுவார். அவருடைய பேரிழப்பிற்கு தனிப்பட்ட முறையிலே என் சார்பிலும், எங்களுடைய கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. அ. மணி அவர்களைப் பொறுத்தவரையில், பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே எனது அறைக்குப் பக்கத்திலே இருந்தவர்தான். அவர் ஆய்வுக் குழுவிலே உறுப்பினராக இருந்தபோது நிறைய விஷயங்களையெல்லாம் எடுத்துக் கூறுவார். அவர் பண்ணுருட்டி நகராட்சியினுடைய தலைவராக இருந்த காரணத்தால், அவருக்கு நிறைய விஷயங்கள் எல்லாம் தெரிந்திருந்த காரணத்தால் ஆய்வுக் குழுவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட நிறைய விஷயங்கள் எல்லாம் அவர் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள், அவருடைய பேரிழப்பிற்கும் எனது சார்பிலும் எங்களுடைய கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. ஐ. கணேசன்

***திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேராசிரியர் அவர்கள் கொண்டுவந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுகிறேன். அமரர் திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர். 31-10-1999 அன்று 97 வயது நிறைந்த அந்த மாமனிதர் சுதந்திரப் போராட்ட தியாகி. அவர் மட்டுமல்ல, அவர் மனைவி, மகன், பேரன் என்று அவருடைய குடும்பமே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தியாகக் குடும்பம். அவருடைய குடும்பத்தாருக்கு எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரராகவும், சிறந்த மேயராகவும் விளங்கிய ஒப்பற்ற மாமனிதர். அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

அதேபோல, அமரர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் திராவிட இயக்க வரலாற்றில் முதல் கட்டப் பகுதியிலே வாழும் வரலாறு



பெற்றவர். இயக்கக் கொள்கையைப் பட்டிதொட்டியெல்லாம் பேசி, பலமுறை சிறை சென்று, சிறைச்சாலையிலேயே குழந்தையைப் பெற்ற தியாக வாழ்க்கையே அவருடைய வாழ்க்கை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தாயாக விளங்கியவர் அவர். காலம்சென்ற பிரதமர் சரண்சிங் அமைச்சரவையில் முதல் தமிழ்ப் பெண் அமைச்சர் என்ற பெருமையைத் தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்த மாபெரும் தியாகி. 1941-ல் தொடங்கி, சுமார் ஐம்பது ஆண்டுக் காலத்திற்கு மேலாக நிகரற்ற பொது வாழ்க்கையிலே ஈடுபட்டவர். 1973-ல் வட சென்னையில், அண்ணல் அம்பேத்கர் கல்லூரியை அமைக்க அரும்பாடுபட்ட தியாகச் செம்மல். அன்னை சத்தியவாணி முத்து அம்மையாரின் மறைவுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நீண்டகாலம் தொழிற்சங்கம் நடத்திய அண்ணன் திரு. எஸ். இராகவானந்தம் வெகுசிறப்பாகப் பணியாற்றக்கூடிய ஆற்றல்மிக்க தொழிற்சங்கவாதி. நண்பர் சுந்தரம் அவர்கள் கூறியதைப்போல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் அமைச்சராக இருந்து சிறப்பான முறையிலே பணியாற்றிய சுயமரியாதை சிங்கம்; தன்மானம் மிக்கவர். சிறந்த திராவிட இயக்கத்தின் வரலாற்றில் அவருக்கென்று தனி இடம் உண்டு என்று சொல்லக்கூடிய அளவுக்கு, சிறப்பான தொழிற்சங்கவாதியாக விளங்கிய அன்னார் மறைவுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, கடந்த தேர்தல் யுத்தத்தின்போது இறந்துவிட்ட ஆற்றல்மிக்க இளைஞர் அன்பில் பொய்யாமொழி அவர்களுடைய மறைவு, மறக்க முடியாத சோகமாகும். என் பிள்ளைகளில் ஒருவனை இழந்துவிட்டேன் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் கண்ணீர் விட்ட காட்சியும், என் உயிரையே இழந்துவிட்டேன் என்று நமது அன்புக்குரிய மேயர் அவர்கள் உருகிய அந்த உருக்கமும் இன்னும் நம்முடைய நெஞ்சமெல்லாம் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அன்பில் பொய்யாமொழி அவர்களுடைய மரணம், நம்மையெல்லாம் மிகுந்த துயரத்திலே ஆழ்த்துகிறது. அவருடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய முதலமைச்சருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினரும், பண்ணுருட்டி மணி என்று அழைக்கப்படும் என்னுடைய ஆருயிர் நண்பராக விளங்கியவருமான அவரைப்பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள், நிமிர்ந்து நின்றால் வேங்கையின் பாய்ச்சல், சிரித்தால் ஒரு சிலிர்ப்பு, பேசினால் அதில் நேசம், பாசம்; அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது என்று குறிப்பிட்டார். யார் கண்ணைத்தான் விட்டு அந்த உருவம் மறையும்? 21 முறை சிறை சென்ற செம்மல் அவர். அதுமட்டுமல்ல MISA-வில் சென்னையிலே ஓராண்டு சிறையிலே தள்ளப்பட்டவர். காலக் குரங்கு பறித்துவிட்டது அந்தப் பண்ணுருட்டி பலாக் கனியை என்று என் நெஞ்சார்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாருடைய குடும்பத்தாருக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாக, என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, மறைந்துவிட்ட 18 முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. முகம்மது கோதர் மைதீன்.

****திரு. முகம்மது கோதர் மைதீன்:*** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர், மரியாதைக்குரிய திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களுடைய மறைவிற்கும், அதைப்போல விடுதலைப் போராட்ட வீரர் மரியாதைக்குரிய திரு. செங்கல்வராயன் அவர்களுடைய மறைவிற்கும் நாங்கள் சார்ந்திருக்கக்கூடிய இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

அதைப்போல, டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னணித் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். அவர்கள், 1971 ஆவது ஆண்டு இந்த அவையிலே அமைச்சராக இருந்த நேரத்தில், நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றேன். அவர் ஒரு சிறந்த பண்பாளராக விளங்கியவர். அன்னாருடைய மறைவிற்கும் நான் என்னுடைய இயக்கத்தின் சார்பாக வருத்தத்தையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதைப்போல, முன்னாள் அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. இராகவானந்தம் அவர்களுடைய மறைவிற்கும் என்னுடைய இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அதுபோல, இந்தச் சட்டமன்றத்தில் நம்மோடு பணியாற்றிய திருச்சிராப்பள்ளி-2 தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பில் பொய்யாமொழி அவர்கள், என்றைக்குமே எல்லோருடைய அன்பிற்கும் பாத்திரமாக இருந்த காரணத்தால், அவருக்கு அன்பில் பொய்யாமொழி என்ற பெயரை வைத்தார்களோ என்று நாம் நினைக்கக்கூடிய அளவிற்கு எல்லோருடைய அன்பிற்கும் அவர்கள் பாத்திரமாக விளங்கினார்கள். அதுமாத்திரமல்லாமல், தான் கொண்டிருக்கக்கூடிய கொள்கையிலே மிகவும் உறுதிப்பாட்டோடு அவர்கள் செயல்பட்டவர்கள். நம்முடைய மாநகராட்சியின் மேயர் அவர்களுக்கு என்றைக்குமே உறுதுணையாக இருந்து செயல்பட்டவர்கள். அவர்கள் மறைவின்போது நம்முடைய முதல்வர் அவர்கள்கூட என்னுடைய மகன்களிலே ஒருவரை இழந்துவிட்டேன் என்று மிக துக்கமான நிலையிலே தன்னுடைய துக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு இயக்கத்தின்மீதும் இயக்கத்தினுடைய தலைவர்கள்மீதும் மிகுந்த மரியாதை கொண்டிருந்த அவர்களுடைய மறைவிற்கு நான் எங்களுடைய இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுடைய குடும்பத்திற்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய மணி அவர்களும் எல்லோருடனும் இனிமையாகப் பழகக்கூடியவர். அவர் தன்னுடைய தொகுதியிலே வாழக்கூடிய மக்களுக்கெல்லாம் சிறப்பாகப் பணியாற்றினார் என்பதைப் பல்வேறு நண்பர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ளக்கூடியவனாக இருக்கிறேன். அவருடைய மறைவிற்கும் நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய தேசிய லீகின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. லா. சந்தானம்.

[1999 நவம்பர் 17

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடு சுதந்திரம் பெற வேண்டும், அதுவும் விரைவாகப் பெற வேண்டும், அதிலும் பூரண சுதந்திரமாகப் பெற வேண்டும் என்கிற நோக்கத்தோடு நேதாஜியால் உருவாக்கப்பட்ட கட்சிதான் அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் இயக்கம் என்கின்ற காரணத்தினால், இயற்கையாகவே சுதந்திரப் போராட்ட வீரர்கள், தியாகிகளிடத்திலே பற்றுதலும் பாசமும் கொண்டவர்கள் நாங்கள். அதிலும், கிருஷ்ணசாமி பாரதியைப் பொறுத்த அளவிலே, எங்களது தலைவர் தேவர் அவர்களுக்கு, அவர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் நெருங்கிய நண்பராக இருந்து அவருடன் பலமுறை சிறைவாசத்தை அனுபவித்தவர்.

அதுபோல, தியாகி செங்கல்வராயன் அவர்கள் எல்லோரிடத்திலேயும் இனிமையாகப் பழகக்கூடியவர். அவர் ஒரு நல்ல தலைசிறந்த தியாகி. சட்டமன்றத்தில் பணியாற்றிய போதும், நாடாளுமன்றத்தில் பணியாற்றியபோதும், மேயராகப் பணியாற்றியபோதும் சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார் என்கின்ற காரணத்தினால்தான், நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள்கூட, நேதாஜி அவர்களுக்குக் கடற்கரையிலே ஒரு சிலையை நிறுவுகின்ற நேரத்தில், அந்தத் தியாகி பொருத்தமானவர் என்கின்ற காரணத்தினாலே அவரை அழைத்து, கௌரவித்து, அந்தச் சிலை திறப்பு விழாவிலே அவரை ஈடுபடுத்தி, கலந்துகொள்ளச் செய்து, நேதாஜியின் பெருமைகளைச் சொல்வதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பினைத் தந்தார்கள். அப்படிப்பட்ட அந்தத் தியாகிகளுடைய மறைவிற்கு எங்களது இயக்கத்தின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, முன்னாள் மத்திய, மாநில அமைச்சராகப் பணியாற்றிய டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள், அதுபோல, இராகவானந்தம் அவர்கள் இருவரும் திராவிட இயக்கத்திலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, அந்த இயக்கத்திலே பணியாற்றி, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்குத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்பின் வாயிலாக பல்வேறு நன்மைகளையும், சமுதாயச் சீர்திருத்தங்களையும் செய்தவர்கள் என்கின்ற முறையில் அவர்களுடைய மரணத்திற்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 நவம்பர் 17] [திரு. லா சந்தானம்]

அதுபோல, இங்கு சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற தம்பி பொய்யாமொழி அவர்கள் இந்த வயதிலே நம்மைவிட்டுப் பிரிவார் என்று யாரும் எண்ணிக்கூட பார்க்க முடியாத அளவிற்கு ஒரு சோகத்தை நமக்கெல்லாம் ஏற்படுத்திவிட்டு மறைந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-10

தம்பி பொய்யாமொழியைப் பொறுத்த அளவிலே அவர் சிறு பிள்ளையாக இருக்கின்ற காலத்தில், அவர்கள் தகப்பனார் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சராகவும், அந்த இயக்கத்தினுடைய தூணாகவும் இருந்து பணியாற்றுகின்ற காலத்திலிருந்து நான் அவரோடு பழகுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் என்கின்ற காரணத்தினால், நமது முதலமைச்சர் அவர்களும், நமது மாநகரத் தந்தை அவர்களும் எத்தகைய வேதனையை அன்றைக்கு அனுபவித்தார்களோ, அதே வேதனையை அனுபவிக்கின்ற ஒரு நிலையைப் பெற்றிருந்தேன் என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லி, அவரை இழந்த அந்தத் துயரத்தை இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை என்கின்ற வருத்தத்தோடு, அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நண்பர் மணி அவர்கள் பண்ணுருட்டி நகராட்சியிலே தலைவராகப் பொறுப்பேற்று, அவர் ஏற்றிருந்த அந்தப் பொறுப்பிலே சிறந்த கடமையுணர்வோடு செயல்பட்டு, அதோடு இந்தச் சட்டமன்றத்திலே பொறுப்பேற்றிருக்கின்ற நேரத்திலே மிக நல்ல மனிதராக எல்லோரோடும் இனிமையாகப் பழகுகின்ற ஒரு பண்பு கொண்டவராக, எல்லாருடைய பாராட்டையும் பெறுகின்ற அளவிற்கு நல்லவராக இருந்த அவருடைய மறைவிற்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே தெரிவித்து அமைகின்றேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்திலே பங்காற்றி, நீண்ட நெடுங்காலம் சிறைவாசம், அதேபோன்று பல்வேறு இன்னல்களையெல்லாம் அனுபவித்த எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களுக்கும், தேச விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட திரு. செங்கல்வராயன் அவர்களுக்கும் — அவர்கள் முன்னாள் மேயராக இருந்து, பல்வேறு

பொறுப்புகளிலே தன்னுடைய பணியைத் திறம்பட ஆற்றியிருக்கிறார்கள் — மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ன்னாருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய தமிழக சட்டமன்றத்திலே முன்னாள் அமைச்சராக இருந்த சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முக்கியஸ்தர்களில், முன்னோடிகளில் ஒருவராக இருந்து, மாநில சட்டமன்றத்திலும், அதேபோன்று மேலவையிலும் தன்னுடைய பொறுப்பை சாதாரண மக்களுக்காக வேண்டி ஆற்றிய அந்த அம்மையாருடைய குடும்பத்தாருக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தச் சட்டப் பேரவையிலே தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த நண்பர் இராகவானந்தம் அவர்கள் இங்கே தன்னுடைய பொறுப்பை ஆற்றி வருகின்ற காலத்தில், அவரோடு பழகுவதற்கும், பல்வேறு பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கும், அந்தச் சட்டமன்றத்திலே பங்காற்றியவன் என்ற முறையில், அவருடைய சிறப்பு ஒரு தனிச் சிறப்பாகத்தான் இருந்தது. அவருடைய இழப்பால் வாடுகின்ற அன்னாருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டப் பேரவையிலே உறுப்பினராக இருந்து இனிய பண்போடு பழகிய அன்பில் பொய்யாமொழி அவர்களிடம் நான் அதிகம் பழகுவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும்கூட, சந்திக்கும் வேளையில் பண்போடு பழகக் கூடியவர். அந்நண்பரை நாம் இழந்திருக்கிறோம். அவருடைய இழப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பேரிழப்பாக நான் கருதுகின்றேன். அந்த வகையிலே அந்த இயக்கத்திற்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அ. மணி அவர்கள் சட்டப் பேரவையிலே மிகவும் பண்போடு மட்டுமல்லாமல், இனிமையான, எளிமையான ஓர் உறுப்பினர் என்ற வகையிலேதான் அவருடைய பழகும் தன்மை இருந்தது. அந்த வகையிலே தன்னுடைய தொகுதிக்கு அவர்





ஆற்றியிருக்கின்ற பணி அதிகம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குடும்பத்திற்கு அவரால் இழப்பு ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய இயக்கத்தின் சார்பிலே அவருடைய குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

ஏற்கெனவே முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாக இருந்து இறந்தவர்களுக்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைவதற்காக விடுதலைப் போராட்ட வீரராக இருந்து, இறைவனடி எய்திய திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், சட்டமன்றத்தினுடைய முதல் சட்டப் பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்றத்தினுடைய உறுப்பினராகவும் இருந்து, கடந்த 31-10-1999 அன்று 97வது வயதில் இறைவனடி சேர்ந்திருக்கின்றார். அவரது மறைவிற்கு எங்களுடைய தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோன்று தியாகி திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து, மாநிலங்களவையில் செயலாற்றி, மக்களுக்காகப் பணியாற்றியிருக்கின்ற அவரது மறைவிற்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று டாக்டர் சத்தியவாணி முத்து, மாநில, மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்று, பெண்களுக்காக தமிழகத்திலே குரல் எழுப்பி, சிறுபான்மை சமுதாய மக்களுக்காக நல்ல முறையில் பணியாற்றி அவர்கள் இறைவனடி சேர்ந்திருக்கின்றார்கள். அவரது மறைவிற்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோல, மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் மேலவை உறுப்பினராக இருந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் உறுப்பினராகப் பொறுப்பேற்று நல்லமுறையில் தமிழக மக்களுக்குச் சேவையாற்றியிருக்கின்றார்கள். அவர்கள் 11-11-1999 அன்று இறைவனடி சேர்ந்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோன்று இந்த சட்டப் பேரவையினுடைய உறுப்பினராகப் பணியாற்றிய அன்பு சகோதரர் அன்பில் பொய்யாமொழி அவர்கள், திருச்சி 2-வது தொகுதியிலேயிருந்து சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள், கடந்த 28-8-1999 அன்று இறைவனடி சேர்ந்திருக்கின்றார்கள். பிரிக்கப்படாத திருச்சி மாவட்டமாக இருந்த காலத்தில், அவருடைய தந்தையார், மரியாதைக்குரிய அன்பில் தர்மலிங்கம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் வீரராக, அமைச்சராக — விவசாய அமைச்சராகப் பொறுப்பேற்று, எங்களுடைய பகுதியில் நல்ல பணியாற்றியவர். அவருடைய மகனாகப் பிறந்த அன்புச் சகோதரர் அன்பில் பொய்யாமொழி அவர்கள், அவருடைய பெயரைக் காப்பாற்றுகின்ற வகையில் அந்தப் பகுதியிலேயிருந்து இரண்டு முறை சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மைச் சமுதாய மக்களுடைய நட்பையும், அன்பையும் பெற்று, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றிருக்கிற இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, இளைஞர்களுடைய எழுச்சி நாயகனாக இருந்துவருகின்ற மரியாதைக்குரிய சென்னை மாநகர மேயர், தளபதி ஸ்டாலின் அவர்களின் உற்ற நண்பனாகவும், அந்தப் பகுதி மக்களிடத்திலே பண்போடு பழகி, இனிய பண்பும், இன்முகமும், இனிய பேச்சும், சுறுசுறுப்பும், செயல் திறனும், கொள்கைப் பிடிப்பும் கொண்டவராகப் பணியாற்றி எங்களுடைய சிறுபான்மைச் சமுதாயத்திற்கும் நல்ல சேவை செய்தவர். அவர், தன்னுடைய 45வது வயதிலே இறந்து விட்டார் என்ற செய்தியை அறிந்து, எங்களுடைய சமுதாயத்தின் சார்பிலே அவருடைய மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவருடைய பிரிவால் துயருறுகின்ற





அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருடைய உற்ற நண்பராக இருந்த தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, நெல்லிக்குப்பம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரான அன்பு சகோதரர் மணி அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமராக, தன்னுடைய சேவையின் பயனாக, படிப்படியாக வளர்ந்து, அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக இருந்து, சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிரம்ப ஆவலோடு, துடிப்போடு செயலாற்றி இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். ஐந்து ஆண்டுக்காலத்திலே அவருடைய தொகுதியிலே நல்ல பல சேவைகளை எண்ணி துடிப்போடு செயலாற்றியவர், முழுமையாகச் செயல்படமுடியாமல் சென்றுவிட்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது உண்மையிலே வருத்தப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அவரது மறைவிற்கும் எங்கள் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட மறைந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரது குடும்பங்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டியவனாக, எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்து அமர்கின்றேன்.

*முற்பகல் 10-20*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. சி. வேலாயுதன்.

***திரு. சி. வேலாயுதன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் விடுதலைப் போராட்ட தியாகி பெரியவர் கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், தான் மட்டும் அல்ல, தன்னுடைய குடும்பத்தையே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தி நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர். பாரதப் பண்பாடு, கலாச்சாரத்தின்மீது ஆழ்ந்த பற்றுதல் கொண்டவர் என்பதை அவருடைய வாழ்க்கையில் பல இடங்களில் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

[திரு. சி. வேலாயுதன்] [1999 நவம்பர் 17

அதுபோன்றுதான் செங்கல்வராயன் அவர்கள் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இந்த நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்டவர் என்று சொன்னால் மிகையாகாது.

அதுபோன்று டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மாற வேண்டும் என்று அரை நூற்றாண்டு மக்கள் மத்தியில் சமுதாய ஒற்றுமைக்காக உழைத்தவர்.

அதேபோல முன்னாள் அமைச்சர் இராகவானந்தம் அவர்கள், தொழிற்சங்கத் தலைவராக இருந்து முதலாளி, தொழிலாளி என்ற வேற்றுமையை மறக்கச் செய்து இருவர் மத்தியிலும் ஒற்றுமை மூலம் ஒரு சமுக உணர்வை ஏற்படுத்திய பெரியவர்.

அன்பில் பொய்யாமொழி அவர்கள் இளம் வயதுடையவர். எப்பொழுதும், யாரிடமும் சிரித்த முகத்தோடு பேசக்கூடியவர். அன்பாக பழகக்கூடியவர். அதைப் பார்க்கும்போது நான் நினைத்தது உண்டு. வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு நல்ல தலைவராக வரக்கூடியவர் என்று பல தடவை நினைத்தது உண்டு.

அதுபோன்று, திரு. அ. மணி அவர்கள் எளிமையானவர்; அடக்கமானவர். அனைவரிடத்திலும் அன்பாகப் பழகக்கூடியவர். இந்த 6 பேருடைய மறைவு இந்த நாட்டிற்கு மிகப் பெரிய இழப்பு என்று சொன்னால் உண்மையிலேயே அது மிகையாகாது.

அதுபோன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் 18 பேர் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கின்றார்கள். ஆன்மா அழியாது என்பது நம்முடைய நம்பிக்கை. அந்த அடிப்படையில் இவர்கள் அனைவரையும் பிரிந்த அந்தக் குடும்பங்களுக்கும் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கும் பெரிய இழப்பாகும். அவர்களுடைய துன்பத்தில் நானும் பங்கேற்றுக்கொண்டு ஆன்மா அழியாது என்ற அடிப்படையில் மீண்டும் இவர்கள் பிறவி எடுத்து பாரதப் பண்பாடு, கலாச்சாரம், சமுதாய முன்னேற்றம் இவற்றிற்காக உழைக்கக்கூடிய வாய்ப்பை எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



1999 நவம்பர் 17]

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy**: Hon. Speaker, Sir, I associate myself with the condolences offered by the Hon. Leader of the House to Thiru L. Krishnasamy Bharathi, who was a veteran freedom fighter. His entire family was in jail at the time of freedom struggle. I would like to convey my deep condolences to the bereaved family.

At the same time, I would like to convey my deep condolences to the family of Thyagi T. Chengalvarayan, who was also a freedom fighter, ex-Mayor and ex-M.L.C., of this State who had served a lot for the development of Chennai City.

Dr. Sathiavani Muthu was a Minister when I was an M.L.A. She was a Minister here and she really worked for the betterment of the weaker sections.

Thiru S. Raghavanandham was also an ex-M.L.C. and former Minister for Labour and he was a very nice man to move with and I had moved with him. Really it is a great loss. We have lost a very good gentleman.

We have also lost Thiru A. Mani and Thiru Anbil Poyyamozhi who were Members of the present Assembly. They were very nice Members. I would like to convey my deep condolences to the bereaved families.

At the same time, we have also lost 18 other ex-Members who had served for the betterment of the nation. I would like to convey my deep condolences to the bereaved families of those 18 ex-M.L.A.s, Sir.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரரும் சமூகத் தொண்டருமாகிய கிருஷ்ணசாமி பாரதி அவர்களுடைய மறைவிற்கு புதிய தமிழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-25*

திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் சுதந்திரப் போராட்டக் காலத்திலே மட்டுமல்லாது அவர் உயிர் நீக்கின்ற காலம் வரையிலேயும் [illegible] பொழுதும், இந்த நாட்டிலே மிகப் பெரிய பிரச்சினை [illegible]

D 31 N99 V 2; [illegible] 984.1 22076.

அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் வருகின்றபோதெல்லாம் தன்னுடைய கருத்துக்களைத் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டு வந்தவர். அவருடைய மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செங்கல்வராயன் அவர்கள் தன்னலமற்ற விடுதலைப் போராட்ட வீரர். அவருடைய மறைவிற்கும் புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மறைந்த டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் மத்திய, மாநில அமைச்சராக விளங்கியவர் மட்டுமல்ல, ஏறக்குறைய 40, 50 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே ஒரு பெண்மணியாக இருந்தும்கூட அரசியலில் துணிவோடு பங்கு பெற்று, நிலைத்து நின்று தாழ்த்தப்பட்ட மக்களுடைய விடுதலைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். அவருடைய மறைவிற்கும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அன்பில் பொய்யாமொழி அவர்களோடு 15 ஆண்டு காலம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பைப் பெற்றவன் நான். எல்லோரும் குறிப்பிட்டதைப் போல பழகுவதற்கு இனிமையாக, எப்போதும் சிரித்த முகத்தோடு விளங்கிய அவரை நாமெல்லாம் இழந்திருக்கிறோம் என்றால் அது மிக்க வேதனைக்குரியது. அவருடைய இழப்பால் வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. அ. மணி அவர்களுடைய மறைவிற்கும், முன்னாள் அமைச்சர் இராகவானந்தம் அவர்களுடைய மறைவிற்கும், அதேபோன்று இந்த அவையினுடைய முன்னாள் உறுப்பினர்கள் 18 பேர்களுடைய மறைவிற்கும் புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த விடுதலைப் போராட்ட



வீரர் எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் தான் மட்டுமின்றி தன்னுடைய குடும்பத்தாரையும் சுதந்திரப் போராட்டக் களத்திலே ஈடுபடுத்திக் கொண்ட மிகச் சிறந்த தியாகச் செம்மல். பாரதி என்று சொன்னால் சுப்பிரமணிய பாரதியாருக்கு அடுத்தாற்போல், நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு அடுத்தாற்போல் இன்றைக்கு நினைவிலே நிறுத்தக்கூடிய அளவிற்கு தியாகி கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள். அவருடைய மறைவிற்கு தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, தியாகி டி. செங்கல்வராயன் அவர்கள் காந்தியடிகளாலே சர்தார்ஜி என்று அழைக்கப்பட்ட கோவிந்தராஜ நாயக்கருக்கு இணையாக மிகச் சிறப்பாக அன்பு பாராட்டப் பெற்றவர். அதேபோல நேரு அவர்களின் மிகச் சிறந்த அன்பிற்குப் பாத்திரமாகத் திகழ்ந்தவர். அந்தக் காலத்திலே ஆங்கிலத்திலே மிகச் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்த Silver tongue ஸ்ரீனிவாச சாஸ்திரிக்கு இணையாக அவர் ஆங்கிலத்திலே சொற்பொழிவாற்றக்கூடியவராகத் திகழ்ந்தவர் என்று சொல்ல நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சீரிய தியாகி செங்கல்வராயன் அவர்கள் மிகச் சிறந்த மனித நேயப் பற்றாளராகத் திகழ்ந்தவர். அவருடைய மறைவிற்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, மிகச் சிறந்த சுயமரியாதைச் சுடரொளியாகத் திகழ்ந்து மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு முன்னாள் அமைச்சராகத் திகழ்ந்தவர் டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள். அவர்களுடைய மறைவிற்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*முற்பகல் 10-30*

அதேபோல, தொழிலாளராக இருந்து, தொழிற்சங்கவாதியாக இருந்து, தொழிலாளர்களுடைய நன்மைக்காகப் போராடியவராகவும், அதேநேரத்திலே தொழிலாளர் நலத் துறை அமைச்சராகவும் இருந்து அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவராகவும் திகழ்ந்தவர் முன்னாள் அமைச்சர் இராகவானந்தம் அவர்கள். அவருடைய

மறைவிற்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம்மோடு சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த யார்மாட்டும் அன்பிலே பொய்யாதவராகத் திகழ்ந்தவரும், எப்பேர்பட்டவர்களிடமும் அன்பை மழையாகப் பொழியக் கூடியவருமாகத் திகழ்ந்தவர் அன்பில் பொய்யாமொழி. அவர்களுடைய இழப்பு உண்மையிலேயே இங்கு இருக்கின்ற சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரிழப்பாகும். எனவே, அவருடைய மறைவிற்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் அவருடைய குடும்பத்தாருக்கும் இயக்கத்திற்கும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

அதேபோல, நெல்லிக்குப்பம் பகுதியிலே, பண்ணுருட்டி பகுதியிலே அந்தக் காலத்திலே ஆராயச்சி மணி என்று சொல்வார்களே, அதைப்போல, அனைத்து மக்களுடைய குறைகளையும் கேட்டறிந்து தீர்க்கக்கூடிய ஒரு மிகச் சிறந்த மக்கள் தொண்டனாகத் திகழ்ந்தவர் மணி அவர்கள். அவருடைய மறைவு உண்மையிலேயே ஈடு செய்ய முடியாத இழப்பு. பழகுவதற்கு இனியவராக மட்டுமின்றி அனைத்துக் கட்சியினரிடமும் அன்போடும் உரிமையோடும் பழகுகின்ற ஒரு மிகச் சிறந்த பண்பாளராகவும் திகழ்ந்தவர் மணி அவர்கள். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும் இயக்கத்திற்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, மிகச் சிறப்புடன் பணியாற்றிய 18 முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் மறைந்த ஆறு பெருமக்களின் குடும்பத்தினருக்கும் தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிந்துள்ள இரங்கல் மற்றும் ஆறுதல் தீர்மானங்களை வழிமொழிந்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.





அவை முன்னவர் அவர்களுடைய தீர்மானங்களையொட்டி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் மறைந்தவர்கள்பால் தங்களுக்குள்ள அன்பையும், அவர்களுடைய இழப்பால் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஏற்பட்டுள்ள துன்பத்தையும் விளக்கியிருக்கிறார்கள். கடந்த இரண்டு, மூன்று மாதங்களில் நாடறிந்த பெரியவர்கள், நல்லவர்கள், வல்லவர்கள் பலரை நாம் இழந்து துன்பக் கடலிலே ஆழ்ந்திருக்கின்றோம். குறிப்பாக, கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், அவர்களுடைய அகவை 97 என்றாலும்கூட, இன்னும் சில ஆண்டுகாலம் இருந்து நமக்கு அறிவுரைகள் வழங்கவேண்டிய வாய்ப்பை நாம் பறிகொடுத்துவிட்டோம் என்று எண்ணித்தான் வருந்த வேண்டியிருக்கின்றது. இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் இந்த மண்ணுக்காகப் போராடி, பல முறை சிறை சென்ற பெருமகன் என்பது மாத்திரமல்ல, இந்த மண்ணின் அனைத்திந்திய ஆட்சி மொழியாக இந்தி மாத்திரமே இருக்கவேண்டும் என்ற ஒரு நிலையை மத்தியிலே காங்கிரசார் எடுத்தபோது, அதை வன்மையாக எதிர்த்து, ஆங்கிலமும் நீடிக்கவேண்டும் என்ற ஒரு பெரு நிலையை எடுத்த பெருமகனார் கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் ஆவார்கள். அதை தன்னுடைய இறுதிக்காலம் வரையிலே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூறி வந்தார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அவருடைய குடும்பமே — இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப்போல — இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தியாகக் குடும்பமாகும். அந்தக் குடும்பத்திலே தோன்றிய அந்தத் தோன்றல் இன்று படமாகிவிட்டார். படமானாலும் இந்திய நாட்டினுடைய சுதந்திரத்திற்கு, மொழிப் பற்றுக்கு ஒரு பாடமாக விளங்குகிறார் என்பதை எண்ணி நாம் ஆறுதல் பெறுகின்றோம்.

செங்கல்வராயன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களோடு சேர்ந்து, இணைந்து பயின்று, நண்பராகப் பழகி, இறுதிவரையிலே அந்த் நட்பைப் போற்றி, அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகும் இந்த இயக்கத்திற்கு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அரும்தோழனாக விளங்கினார்கள்.

*முற்பகல் 10-35*

நான் கேள்விப்பட்டது சரியாக இருக்குமேயானால், தமிழ் மாநில காங்கிரஸ் என்ற அந்தக் கட்சி தோன்றியபோது, முதல் உறுப்பினராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டார் என்பதிலிருந்து, அவர் அந்த

அளவிற்கு, அடைந்த சுதந்திரத்தை நல்ல முறையிலே பேணிப் பாதுகாக்கவேண்டும் என்பதிலே நம்பிக்கை வாய்ந்தவராக இருந்தார் என்பதை உணர முடிகின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடற்கரையிலே நேதாஜியினுடைய சிலையைத் திறந்தபோது, அவருடைய முன்னிலையிலேதான் அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்கள் அங்கே உரையாற்றும்போது சொன்னார்கள்; 'நேதாஜி அவர்களுடைய சொற்பொழிவை நான் மொழிபெயர்த்திருக்கிறேன்' என்ற பெருமிதத்தை அங்கே எடுத்து விளக்கினார்கள். இறுதிவரையிலே, அவர் மறைகின்ற சில வாரங்களுக்கு முன்புவரையிலே, அவர்களுடைய குரல் தழுதழுத்ததில்லை. சிங்கத்தின் குரலாகவே ஒலித்துக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட பேச்சாற்றல் வாய்ந்தவர், நினைவாற்றல் வாய்ந்தவர். இத்தனைக்கும் மேலாக, நட்போடு பழகக்கூடியவர். அவர் அரசியல் பண்பாடு தெரிந்தவர். அவரை இழந்தது தமிழகத்திற்குப் பெரும் இழப்பு.

அம்மையார் சத்தியவாணி முத்து அவர்கள் இதே மாமன்றத்திலே உறுப்பினராக இருந்து — 1957 ஆம் ஆண்டிலேயே எங்களோடு உறுப்பினராக அமர்ந்து, பல புரட்சிகரமான பேச்சுக்களை இந்த மன்றத்திலே வழங்கியவர். பிறகு அமைச்சராகப் பொறுப்பேற்றவர். மத்தியிலும், மாநிலத்திலும் அமைச்சராக இருந்து புகழ் எய்தியவர். இளம் பிராயத்திலேயே, குறிப்பாக, மகளிர் பொது வாழ்க்கைக்கு வருவதைப் பற்றி கேள்விக்குறி எழுந்திருந்த அந்தக் காலகட்டத்திலேயே தன்னைப் பொது வாழ்க்கைக்கு உரியவராக ஆக்கிக்கொண்டு, தந்தை பெரியாருடைய வழியில், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நெறியில் சுயமரியாதை இயக்கத்தைக் கட்டிக் காத்தவர். குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், பூரண கர்ப்பவதியாக இருந்தபோது — குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அன்றையதினம் தமிழகத்திலே கட்சி மாறுபாடு இல்லாத ஒரு புரட்சி நடைபெற்றபொழுது, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம்கூட அந்தக் கல்வித் திட்டம் கூடாது என்று ஆர்ப்பரித்த அந்தக் காலகட்டத்தில் — பூரண கர்ப்பவதியாக இருந்த அம்மையார் அவர்கள், அந்தக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிறைப்பட்டார்கள் என்பது, அவருடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய முக்கியமான அத்தியாயமாகும்.



நண்பர் இராகவானந்தம் — நான் நண்பர் இராகவானந்தம் என்று குறிப்பிடுவதன் காரணமே, என்னுடைய ஆருயிர் நண்பராகக் கடைசிகாலம் வரையிலே அவர்கள் விளங்கியவர்கள் ஆவார்கள். சுயமரியாதை இயக்கத்திலே பழுத்த பழம் அவர். அவரது இளம் பிராயத்திலிருந்தே தொழிலாளிகளுக்காகப் பாடுபடக்கூடிய அந்தத் தொண்டுள்ளம் வாய்ந்தவர், நாத்திகக் கொள்கை படைத்தவர். அதற்கு எடுத்துக்காட்டாக அவருடைய பிள்ளைகளில் ஒரு பிள்ளைக்கு —எல்லோரும் புரட்சிக்காரர்களுடைய பெயர்களை இடுவார்கள் — ஆனால் அவர் தன்னுடைய ஒரு பிள்ளைக்கு, 'கடவுள் இல்லை' என்றே பெயர் சூட்டியிருந்தார். நான்கூட ஓரிடத்தில் சொன்னேன். 'வெங்கட்ராமன்' என்றால், முழுப் பெயரைச் சொல்லாமல், 'வெங்கட்' என்றோ, 'ராமன்' என்றோ சொல்வார்கள். அதுபோல நீங்கள் 'கடவுள் இல்லை' என்ற பெயரை வைத்துவிட்டீர்கள். இதை அரைப் பெயராகச் சொல்கிறவர்கள், 'கடவுள்' என்று அழைத்தால் என்ன செய்வீர்கள், அல்லது 'இல்லை' என்று அழைத்தால் என்ன செய்வீர்கள் என்றுகூடக் கேட்டதுண்டு. அந்த அளவுக்குத் தன்னுடைய குழந்தைக்கே 'கடவுள் இல்லை' என்ற பெயர் வைத்த அப்பழுக்கற்ற நாத்திகராக, அதே நேரத்திலே தந்தை பெரியாருடைய கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற சுயமரியாதை வீரராக, அண்ணாவுடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்ட தளகர்த்தராக விளங்கியவர். அவர் இன்று இல்லை என்னும்பொழுது மிகவும் வேதனையடைகின்றோம்.

அன்பில் பொய்யாமொழி, என்னுடைய ஆருயிர் நண்பர் அன்பில் தர்மலிங்கம் என் கரம் பிடித்து விட்டுச்சென்ற பிள்ளை. நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், நான் திருச்சி மாவட்டப் பகுதியிலே சுற்றுப்பயணத்திலே ஈடுபட்டிருந்தபொழுது, அவர் என்கூட இரவு பதினோரு மணி வரையிலும் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடைபெற்று வீட்டுக்குச் சென்றார். செல்லும்போதுகூட — என்னுடைய குரல் வளத்திற்காக நான் அந்தச் சுற்றுப் பயணத்திலே திராட்சைப் பழங்களைப் பயன்படுத்திக்கொண்டிருந்தேன் — காய்ந்த திராட்சையை. அது, நான் சாப்பிட்டுத் தீர்ந்துவிட்டது. அந்தக் கிண்ணத்தைப் பார்த்துவிட்டு, 'அப்பா, காலையில் நான் அந்த திராட்சையை வாங்கி வருகின்றேன்' என்று சொல்லிப் போனவர்தான்; அவர் காய்ந்த திராட்சையாக ஆகிவிட்டார். அந்தப்

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 நவம்பர் 17

பிள்ளையை இழந்து நான் பட்ட பாடும், படும் பாடும் எவ்வளவு என்பதை உணர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அதனை எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

*முற்பகல் 10-40*

அதைப்போல, என்னுடைய ஆருயிர்த் தம்பி, பண்ணுருட்டி மணி, கட்டடத் தொழிலாளியாகத் தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்து, அந்த எளிய நிலையிலிருந்து இம்மியும் தன்னை மாற்றிக்கொள்ளாமல், பண்ணுருட்டி நகராட்சி மன்றத் தலைவராக ஆகின்ற அளவுக்கு மக்களுடைய செல்வாக்கைப் பெற்று, நெல்லிக்குப்பம் தொகுதியிலேயிருந்து சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்குள்ள அனைவரும் போற்றிப் புகழ்கின்ற வகையிலே, உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான பல சட்ட திட்டங்களை எல்லாம் எடுத்து விளக்குகின்ற ஆற்றலாளராக விளங்கியவர் மணி. அவரும், இன்னும் 40, 50 ஆண்டுகாலம் வாழவேண்டியவர். அதற்குள்ளாகத் தன்னுடைய வாழ்வைச் சுருக்கிக் கொண்டு போய்விட்டார். இவர்களுக்கெல்லாம் இரங்கலைத் தெரிவித்து, அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஆறுதலை வழங்கவேண்டும். நமக்கு நாமே ஆறுதல் வழங்கிக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். அவர்களோடு சேர்த்து, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் தொடக்கத்திலே குறிப்பிட்ட, மறைந்த, சட்டப் பேரவையினுடைய முன்னாள் உறுப்பினர்கள் 18 பேர்களுடைய குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பேரவையில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன)*



1999 நவம்பர் 17] [பேரவைத் தலைவர்]

நடப்புப் பேரவையிலே உறுப்பினர்களாக இருந்த பெருமக்கள் மறைந்தால், இரங்கல் தீர்மானத்தோடு பேரவை ஒத்திவைக்கப்படுகின்ற மரபின் அடிப்படையில், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த அளவோடு இன்று பேரவை ஒத்திவைக்கப்படும்.

## 3. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அடுத்து, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் என்னுடைய அறையிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும், நாளை (18-11-1999) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், முற்பகல் 10-43 மணிக்குப் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. பி. முத்துசாமி அவர்கள் தமிழ்நாடு வரி விதிப்பு தனி நடுவர் மன்றத்தில் நீதித் துறை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் 1-12-1998 ஆம் நாளிட்ட 322 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்பு தனி நடுவர் மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தம்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 46/1998) 12-1-1999 முதல் அமலுக்கு கொண்டு வருவது குறித்து வணிக வரிகள் துறையின் 12-1-1999 ஆம்

நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. தருமபுரி அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள அறிக்கையிடப்பட்ட 16 அங்காடிப் பகுதிகளில் சாமை மற்றும் மொச்சையின் (அனைத்து வடிவங்களிலும்) விற்பனையை முறைப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 8-1-1998 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. கால்நடை, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு ஆகியவற்றைப் பொறுத்தவரையில், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5-11-1997 ஆம் நாளிட்ட 477 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. யாதொரு உள்ளூர்ப் பகுதிக்குள் யாதொரு மோட்டார் வாகனத்தை பயன்படுத்துவதற்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோ அப்பகுதிக்குள் அவ்வாகனம் நுழையும்போது, மோட்டார் வாகன கொள்முதல் மதிப்பீட்டின் பேரில் 1-4-1998 ஆம் நாளன்றும் அந்நாள் முதற்கொண்டும் அறிவிக்கையின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நுழைவு வரியை விதித்து வசூலிக்கவேண்டுமென நிர்ணயிக்கப்படுவது குறித்து வணிக வரிகள் துறையின் 12-1-1999 ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





6. கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய் அல்லது புடல், பாகற்காய் அல்லது பாகல், சுரைக்காய் அல்லது சுரை, பரங்கிக்காய், பீர்க்கங்காய், சாம்பல் பூசணி அல்லது பூசணிக்காய், முருங்கைக்காய், பச்சை மிளகாய், சேனைக் கிழங்கு (அனைத்து வகை), காரட், பீன்ஸ் (அனைத்து வகை), வாழைக்காய், பீட்ரூட், கொய்யா, சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு, எலுமிச்சை ஆகிய வேளாண் விளைபொருட்களை பொறுத்தவரையில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்ட பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 16-7-1998 ஆம் நாளிட்ட 234 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. மா, கொய்யா, சிட்ரஸ் (சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு, நார்த்தை, எலுமிச்சை, திராட்சை), மாதுளை, பலா மற்றும் அன்னாசி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக சேலம் மாவட்டத்தை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 30-11-1998 ஆம் நாளிட்ட 469 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. புதுக்கோட்டை அங்காடிக் குழுவின்கீழ் செயல்படும் பத்து அங்காடிப் பகுதிகளை வரகு, உளுந்து (அனைத்து வடிவங்களிலும்), பச்சைப்பயறு (அனைத்து வடிவங்களிலும்), கொள்ளு (அனைத்து வடிவங்களிலும்), வெங்காயம், மரவள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மரவள்ளிக் கிழங்கு மாவு, மரவள்ளிக் கிழங்கு ஸ்டார்ச், மஞ்சள் அனைத்து வடிவங்களிலும் (குண்டு மற்றும் விரலி மஞ்சள்), கொத்தமல்லி (தனியா விதை), புளி (அனைத்து வடிவங்களிலும்), பனை வெல்லம் (அனைத்து வடிவங்களிலும்) மற்றும் வேப்பங்கொட்டை ஆகிய வேளாண் விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதற்காக

அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5-1-1999 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(c) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 12-4-1999 ஆம் நாளிட்ட 85 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. வெள்ளைப் பூண்டைப் பொறுத்தவரையில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களை அறிக்கையிடப்பட்டப் பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5-11-1998 ஆம் நாளிட்ட 435 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(c) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. சென்னையில் உள்ள கண் பார்வையற்றோருக்கான திருவாளர்கள் லயன்ஸ் ஃபவுண்டேஷன் நிறுவனம், தங்களுடைய கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி பள்ளிக்காக, தளவாடம் மற்றும் எந்திரம், அறைகலன்கள்' மற்றும் மூலப் பொருட்கள் ஆகியவற்றை வாங்கும்போதும் அந்நிறுவனத் தயாரிப்புப் பொருட்களை விற்கும்போதும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அந்நிறுவனம் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 1-12-1998 ஆம் நாளிட்ட 323 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



12. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 26-3-1981 ஆம் நாளன்று உருவாகி 26-3-1981 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட 11(1)/வ.வ.அ.நி/164(சி)/81 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 22-12-1998 ஆம் நாளிட்ட 336 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத் திறன் தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில், பணித் தொழில் ஆகியவற்றிற்காக வரி வசூலித்தல்) விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12-1-1999 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகள், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகள் மற்றும் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெரும் அளவிலான மது விதிகள் ஆகிய விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 4-1-1999 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53/353-sig-5a

15. 5-10-1994 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1)/ வ.வ.அ.நி/98/94 ஆம் எண் அறிவிக்கையை மாற்றுவது குறித்தும் மற்றும் 17-11-1993 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II (1)/ /வ.வ.அ.நி./170/93 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும் வணிக வரிகள் துறையின் 28-4-1999 ஆம் நாளிட்ட 99 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

16. 1-6-1994 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1).வ்.வ.அ.நி./50/94 ஆம் எண் அறிவிக்கையை மாற்றுவது குறித்தும் மற்றும் 22-12-1993 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1)/ வ.வ.அ.நி./172/93 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்தும் வணிக வரிகள் துறையின் 28-4-1999 ஆம் நாளிட்ட 99 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

17. சென்னை மாநகராட்சி குடும்ப நலம், மகப்பேறு மற்றும் குழந்தை நலத் துறையின் (Family Welfare, Maternity and Child Health Department) கீழ் வரும் பதவிகளுக்கான தற்காலிக விதிகள் இயற்றியது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 28-8-1998 ஆம் நாளிட்ட 161 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

18. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு, திருவாளர்கள் ஷீமா மறுவாழ்வு பயிற்சி மையத்தில், 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, 1997 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் வரை பயிற்சி அளிக்கும்போது செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க விற்பனை வரியைச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 4-2-1999 ஆம் நாளிட்ட 15 ஆம் எண்





அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. மட்டை உரிக்கப்படாத அல்லது மட்டை உரிக்கப்பட்ட அல்லது கொப்பரைத் தேங்காயைப் பொறுத்தவரையில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல்நோக்கங்களுக்காக தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களை அறிக்கையிடப்பட்ட பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 7-4-1997 ஆம் நாளிட்ட 161 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. கிராம சபைக்கு வேறு சில செயற்பணி பொறுப்புகளை ஒப்படைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-7-1998 ஆம் நாளிட்ட 152 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. கோயம்புத்தூர் மாவட்டம், S.மலையாண்டிப்பட்டிணம், ஊராட்சியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை 5-7-1998 வரை நிறைவேற்ற தனி அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 30-7-1998 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நுண்ணறிவுத் திறன், தொழில், வணிகத் தொழில், மரபுத் தொழில், பணித் தொழில் ஆகியவற்றின் மீதான நிலுவை வரியை வசூலித்தல்) விதிகளை வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18-1-1999 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு

[1999 நவம்பர் 17

சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 15-2-1999 ஆம் நாளிட்ட 19 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (போக்குவரத்து-VII) துறையின் 4-5-1999 ஆம் நாளிட்ட 584 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி-I)-ல் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 18-11-1998 ஆம் நாளிட்ட 684 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 7-4-1998 நாளன்று உருவாகி 7-4-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1) /வ.வ.அ.நி/43(d-4)98 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 1-3-1999 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 15-6-1988 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி/96/88 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்து வணிக



1999 நவம்பர் 17]

வரிகள் துறையின் 11-3-1999 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 12-4-1999 ஆம் நாளிட்ட 90 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. வணிக வரிகள் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் 6-10-1995 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/CTRE/116(b)/95 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 5-4-1999 ஆம் நாளிட்ட 85 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

30. மாவட்ட நீதிபதி திரு.மலை. சுப்பிரமணியன் அவர்கள், சென்னை, விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் 29-4-1999 ஆம் நாளிட்ட அரசாணை (3D) எண் 5-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) திரு. எம். மாணிக்கம் அவர்கள் மதுரை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் (நீதித் துறை) 20-5-1999 ஆம் நாளிட்ட அரசாணை (2D) எண் 55ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. பெங்களூர் விமானப்படை, தணிக்கைத் துணை இயக்குநர் திரு. டி. நூர் மொகையுதீன் (இந்திய தணிக்கை மற்றும் கணக்குப் பணி-94) அவர்கள் சென்னை, தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினராக இரண்டாண்டு காலத்திற்கு, வேற்றுப் பணியில் நியமிக்கப்பட்டது குறித்து வணிக வரிகள் துறையின் 20-7-1998 ஆம் நாளிட்ட அரசாணை (3D) எண் 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. சென்னை-600 028-ல் உள்ள திருவாளர்கள் டூரிஸ்ட் ஹாஸ்டல் ஆந்திரா மஹில சபா, 1993 ஏப்ரல் முதல் 1995 நவம்பர் வரையிலான கால அளவிற்கு 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின்கீழ் வரித் தொகை மற்றும் அபராதத் தொகை வகையில் செலுத்தத்தக்க மொத்தத் தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 25-5-1999 ஆம் நாளிட்ட 115 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. 10-6-1999 ஆம் நாளிலிருந்து 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (நான்காவது திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1999) செயலுக்கு வரும் என்று நிர்ணயிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 7-6-1999 ஆம் நாளிட்ட 132 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. பட்டியலிடப்பட்ட பணிகளுக்காக 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்துதலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின்கீழ் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் அறிவிப்பது குறித்து தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 28-4-1999 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு





தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (Courts-II A) துறையின் 4-5-1998 ஆம் நாளிட்ட 520 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 44/1997) 15(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 18-8-1998 ஆம் நாளன்று உருவாகி 18-8-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ.அ.நி/73(2-1)/94 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19-5-1999 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. யாதொரு வணிகரும் அகர்பத்திகள் விற்பனை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 28-5-1999 ஆம் நாளிட்ட 123 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

39. 10-6-1999 ஆம் நாளிலிருந்து 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1999) அமலுக்கு வரும் என்று நிர்ணயிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 10-6-1999 ஆம் நாளிட்ட 139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1999 நவம்பர் 17

40. முப்பத்திரெண்டு நட்சத்திர ஓட்டல்கள் 1-2-1985 ஆம் நாள் முதல் 24-3-1989 ஆம் நாள் வரையிலான கால அளவில் விற்பனை செய்த உணவு மற்றும் பானங்கள் குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் செலுத்தத்தக்க வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதம் ஆகிய வகையில் மொத்த தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 11-6-1999 ஆம் நாளிட்ட 140 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 10-9-1998 ஆம் நாளிட்ட 267 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-A(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19-2-1999 ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-A(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

43. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 8-8-1994 ஆம் நாளன்று உருவாகி 14-9-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ.அ.நி/91/94 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19-5-1999 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



1999 நவம்பர் 17]

[1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

44. யாதொரு வணிகரும், யுனானி மருந்துகள் விற்பனைமீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரித் தொகை தொடர்பாக விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 28-5-1999 ஆம் நாளிட்ட 122 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

45. 1-6-1999 ஆம் நாளன்று 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பர வரிச் (தகராறுகளைத் தீர்த்துவைத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 12/1999) செயலுக்கு வரும் என்று அறிவிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 1-6-1999 ஆம் நாளிட்ட 125 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பர வரிச் (தகராறுகளை தீர்த்துவைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1999) 16(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. 10-6-1999 ஆம் நாளன்று 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1999) செயலுக்கு வரும் என்று அறிவிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 7-6-1999 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சில அலுவலகங்களில் உள்ள அதிகாரிகளில் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்பது குறித்து பொதுப் பணித் துறையின் 5-3-1999 ஆம் நாளிட்ட 128 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1997) 7(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

48. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

49. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

50. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

51. 1998-99 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம்-1) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

52. 1998-99 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம்-2) ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

1. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 22-11-1989 ஆம் நாளிட்ட 838 ஆம் எண் அரசாணை சுருக்கத்தில் பிழைத் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 18-8-1998 ஆம் நாளிட்ட 13315/B2/98-5 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1999).

3. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1999)





4. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி விதிகளைச் சேர்ந்த (தமிழ்நாடு) படிவம்-1-ல் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19-1-1999 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

5. பொதுநலனைக் கருதி இந்த ஆண்டில், மாநிலங்களுக் கிடையிலான வர்த்தகத்தின்போது அல்லது வணிகத்தின்போது, இம்மாநிலத்திற்கு வெளியே விற்பனைக் கிளை மாற்றம் அல்லது சரக்கு ஒப்படை மாற்றம் எதுவும் கொண்டிராத, எந்தவொரு வணிகரும் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய், தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில், சுத்திகரிக்கப்பட்ட பருத்திக்கொட்டை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட தவிட்டு எண்ணெய் ஆகியவை உட்பட அனைத்து வகை சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களைப் பொறுத்தமட்டில், 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் அவரால் செலுத்தத்தக்க வரியானது "சி" அல்லது "டி" படிவத்துடனோ அல்லது அந்தப் படிவம் இன்றியோ, நான்கு சதவீதம் என்ற வீதத்தில் கணக்கிடப்பட வேண்டும் என்று ஆணையிடுவது குறித்து வணிக வரிகள் துறையின் 1-3-1999 ஆம் நாளிட்ட 36 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

6. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1999).

7. 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1999)-ன்படி 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்ஃபு வாரிய (உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறையின் 10-11-1998 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

8. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 18-8-1994 ஆம் நாளன்று உருவாகி 18-8-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ.அ.நி./73(அ-3)/94 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 19-5-1999 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

9. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் 8-8-1994 ஆம் நாளன்று உருவாகி 14-9-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அஅ(1)/வ.வ.அ.நி./92/94 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 19-5-1999 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

---

D
12/8/1999
N97:84.1

221076.

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலக நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.